# 10 பிள்ளைகளுக்கான ஆடை நிர்மாணம்





## 'சன்சூட்' (வெப்பகால அங்கி) மாதிரியுரு

### பிள்ளைகளுக்கான ஆடையில் (உடையில்) இருக்க வேண்டிய பண்புகள்

துடிப்பான பிள்ளைப் பருவம் அழகானது. அழகானவற்றைக் காண்பதற்கும் அழகான ஆடைகளை அணிவதற்கும் அவர்கள் மிக ஆர்வம் காட்டுவார்கள்.

குழந்தைகள், குழந்தைப் பருவத்தைத் தாண்டி பிள்ளைப் பருவத்தில் காலடி எடுத்து வைப்பர். பிள்ளைப் பருவத்தில் அவர்கள் மிகவும் குதூகலமாய் இருப்பர். வெளிச்சூழலைப் பரீட்சித்துப் பார்ப்பதில் ஈடுபடுவர். சூழலை ஆய்வு செய்வர்.

குழந்தைப் பருவத்தில் விளையாட்டுப் பொருள்களுடன் விளையாடிய பிள்ளை, பிள்ளைப் பருவத்தின்போது சிறிய பந்தொன்றை உருட்டவும், கதிரையை தள்ளவும் முயற்சியெடுக்கும். அப்பிள்ளையால் எழுந்து நிற்கவும் அங்குமிங்கும் செல்லவும் முடியுமாக இருக்கும்.

இப்பருவத்தில் பிள்ளை செயற்பாடுடையதாகும். பிள்ளை, செயற்பாடுகளில் ஈடுபடும்போது உடைகள் அழுக்கடைவதனால் அதனை அடிக்கடிச் சுத்தம் செய்வது அவசியமாகும். எனவே, அடிக்கடி சலவை செய்யும்போது தாக்கங்கள் ஏற்படாததாகவும் நிறங்கள் மங்காததாகவும் நன்கு வியர்வையை உறிஞ்சிக்கொள்ளக் கூடியதுமான துணிவகைகளைத் தெரிவு செய்தல் முக்கியமானதாகும்.

இலங்கை போன்ற நாடுகளில் வெப்பமான காலநிலைக்கு ஈடுகொடுக்கக் கூடிய துணிகளைத் தெரிவுசெய்துகொள்ளல் விசேடமானது.

வியர்வையை நன்கு உறிஞ்சிக்கொள்ளும்,

- பருத்தி
- இலினன்
- இரேயோன்

போன்ற துணிகளால் தயாரித்த உடைகளே மிகப் பொருத்தமானவையாகும்.

சிறுபிள்ளையொன்றுக்கு உடையைத் தயாரிக்கும்போது பெரும்பாலும் அவர்களின் சௌகரியத்தைக் கவனத்திற்கொள்ளவேண்டும். அங்குமிங்கும் ஓடிப்பாய்ந்து, ஒளிந்து விளையாடும் பிள்ளையின் உடலுக்கு அசௌகரியத்தை அளிக்கக்கூடிய உடையைத் தைக்கக்கூடாது.

துடிப்பான பிள்ளைப் பருவத்தில் பிள்ளைக்கு அணிவிப்பதற்கு வசதியான உடையைத் தைப்பது மிகவும் பொருத்தமானதாகும். அதே போன்று பொருத்தமான, இலகுவாகக் கழற்றக்கூடிய திறப்புகளை அமைப்பதும் முக்கியமாகும்.

பிள்ளையின் ஆடையின் திறப்பிற்கு, இணைப்பி (Zip fasteners) மற்றும் கொழுக்கியும் கண்ணும் என்பவற்றைத் தைத்தால் தோலில் காயங்கள் ஏற்படுவதுடன் உடலுக்கு வசதியீனத்தையும் கொடுக்கும்.

நிறமானதும் அழகானதுமான உடை, துடிப்பான பிள்ளைக்கு அழகான தோற்றத்தை அளிக்கும். பிரகாசமான நிறங்கள் சிறுபிள்ளைக்கு மிகவும் பொருத்தமானது. இப்பருவத்தில் பிள்ளைக்காக உடை தயாரிக்கும்போது, மனதைக் கவரக்கூடிய ஒரு நிறத்திலோ அல்லது பல நிறங்களைக் கலந்தோ உடைகளை அமைப்பின் கவர்ச்சியாகத் தோற்றமளிக்கும்.



உரு 10.1 அணிவதற்கு வசதியான உடையை அணிந்துள்ள பிள்ளை

சிறிய பூக்கள், விலங்கு உருவங்கள், கடும் நிறங்களை உடைய கட்டங்கள், புள்ளிகள், கோடுகள் போட்ட துணிகள் பிள்ளைகளுக்கான ஆடைகளுக்கு மிகவும் பொருத்தமானவையாகும். விசேடமாக, இவ்வாறான அலங்காரமுள்ள துணிகளினாலான ஆடைகளைத் தைக்கும்போது, அதற்குப் பொருத்தமான தனி நிறத்தில் துணிகளைக் கலந்து, அலங்கார வடிவமைப்புகளைத் தயாரிக்க முடியும்.

இளம் நிறங்களில் ஆடைகளைத் தைத்தாலும் அவற்றை கடும் நிறங்களாலான துணிகளால் அலங்கரிக்க முடியும்.

இப்பருவத்தில் பிள்ளைகள் விதம்விதமான கடும் வர்ணங்களுக்கு விருப்பத்தைக் காட்டுவர். அலங்கரிப்பதற்குப் பொருத்தமான நிறத் துணிகளைக் கலந்து தைப்பதனால் பிள்ளையின் உடைகளில் பல்வேறுபட்ட தன்மைகளை ஏற்படுத்தலாம். புதிய உடைகளை அணியும் மகளுக்கோ அல்லது மகனுக்கோ பல்வேறு பாங்குகளில் உடைகளைத் தயாரிப்பது பொருத்தமானதாகும்.



உரு 10.2 வேறுபட்ட பாங்குகளினாலான உடைகளை அணிந்துள்ள சிறுவர்



**செயற்பாடு 1**

மேலே குறிப்பிட்ட பந்தியை நன்கு வாசித்து, உரு 10.1, 10.2 என்பவற்றையும் அவதானித்து, கீழே காணப்படும் அட்டவணையைப் பூர்த்தியாக்கவும்.

| பிள்ளையின் உடையொன்றில் அமைய வேண்டிய பண்புகள் | அதனால் கிடைக்கும் நன்மைகள் |
|---|---|
| | |

அட்டவணை 1

## ஒப்படை - 1



பல்வேறு பாங்குகளினாலான பிள்ளை உடைகளின் படங்களைத் திரட்டி, ஒரு சிறு புத்தகம் தயாரிக்கவும்.

1-2 வயது உடைய பிள்ளை ஒன்றிற்குப் பொருத்தமான ‘சன்சூட்’ (வெப்பகால அங்கி) ஒன்றை நிர்மாணிப்போம்.


## ‘சன்சூட்’உடை ஒன்றிற்கான மாதிரியுருவை நிர்மாணித்தல்

பத்தாம் தரத்தில் குழந்தை உடைக்கான மாதியுரு தயாரிக்கும் திறனைப் பெற்ற நீங்கள், அந்த அனுபவத்தைக் கொண்டு ‘சன்சூட்’ ஒன்றிற்கான மாதிரியுருவை நிர்மாணிப்பதற்கு ஆயத்தமாகுங்கள்.



### செயற்பாடு 2

‘சன்சூட்’ஒன்றிற்கான மாதிரியுரு தயாரித்தல். சதுரக்கோட்டுத்தாள்/ வரைபுத்தாளை உபயோகித்து, ‘சன்சூட்’ஒன்றின் மாதிரியுருவை அளவுத் திட்டத்திற்கேற்ப வரையவும். அளவுப் பிரமாணம்: ஒரு சிறிய சதுரம் = 1 cm




உரு 10.3 ‘சன்சூட்’ மாதிரியுரு

## ‘சன்சூட்’ மாதிரியுரு நிர்மாணத்தின்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகள்

1. 55cm உயரமும் 22cm அகலமும் கொண்ட ஒரு நீள்சதுரம் வரையவும்.
2. அந்த நீள்சதுரத்திற்கு ABCD எனப் பெயரிடவும்.
3. A இலிருந்து D பக்கத்திற்கு 19.5cm அளந்து E என்றும் B இலிருந்து C ஐ நோக்கி 19.5 cm அளந்து F என்றும் அடையாளப்படுத்தி, EF ஐ இணைத்து, கிடையான ஒரு கோட்டை வரையவும்.
4. E இலிருந்து D ஐ நோக்கி 19.5cm அளந்து G எனப் பெயரிட்டு, F இலிருந்து C ஐ நோக்கி 19.5cm அளந்து H எனக் குறித்து GH ஐ ஒரு கிடையான கோட்டால் இணைக்கவும்.
5. G புள்ளியிலிருந்து D ஐ நோக்கி 3.5cm அளந்து J எனவும் H புள்ளியிலிருந்து C ஐ நோக்கி 3.5cm அளந்து K எனவும் அடையாளமிட்டு, JK ஐக் கிடையான கோட்டால் இணைக்கவும்.
6. E இலிருந்து F ஐ நோக்கி 5.5 cm அளந்து L எனக் குறிக்கவும்.
7. F இலிருந்து B ஐ நோக்கி 6.5 cm அளந்து M எனக் குறிக்கவும்.
8. F இலிருந்து C ஐ நோக்கி 7.5 cm அளந்து N எனப் பெயரிடவும்.
9. MLN புள்ளிகளை வளைவாக இணைத்து ‘சன்சூட்’ இன் கால்களின் அமைப்பை வரையவும்.
10. B இலிருந்து A ஐ நோக்கி 1.5 cm அளந்து S எனப் புள்ளியிடவும்.
11. SM புள்ளியை நேர்கோட்டால் இணைத்து ‘சன்சூட்’ இன் பிற்பக்க அமைப்பை வரையவும்.
12. N இலிருந்து L ஐ நோக்கி வட்டமான கோட்டினூடே 6.5 cm அளந்து P எனப் புள்ளியிடவும் (L -P வளைவான கோட்டினால் இணைத்து முன் கால்களின் அமைப்பை வரையவும்).
13. H இலிருந்து G ஐ நோக்கி 8 cm அளந்து Q என அடையாளமிடவும்.
14. K இலிருந்து J ஐ நோக்கி 12 cm அளந்து R எனப் புள்ளியிடவும்.
15. PQ புள்ளிகளை இணைத்து ‘சன்சூட்’ இன் முன்புற வடிவமைப்பை வரைந்து கொள்ளவும்.
16. QRD புள்ளிகளை இணைத்து வரைபடத்தில் காணப்படுவது போன்று ‘சன்சூட்’ இன் மேற்பகுதி அமைப்பை வரைந்து கொள்ளவும்.
17. 1cm தையல் விடுவெளியை ‘சன்சூட்’ இன் வெளிப்புறத்தே விடவும்.

## தோட்பட்டி இரண்டிற்குமான மாதிரியுருவைத் தயாரித்தல்

1. 3.5 cm அகலமும் 36 cm நீளமும் கொண்ட ஒரு நீள்சதுரம் வரையவும்.
2. அதற்கு ABCD எனப் பெயரிடவும்.
3. AD கோட்டை நடுவே மடிக்கவும்.
4. ABCD வரை 0.5 cm தையல் விடுவெளி வைக்கவும்.



**செயற்பாடு 3**

அளவுநாடா, அடிமட்டம், பென்சில் என்பன பயன்படுத்தி, கபில நிறத்தாளில் ‘சன்சூட்’ மாதிரியுருவை வரையவும்.



# ‘சன்சூட்’ உடையைத் தைத்துப் பூரணப்படுத்தல்

குழந்தை உடையொன்றில் இருக்க வேண்டிய பண்புகள் பற்றி நீங்கள் பெற்ற அறிவை மீண்டும் ஞாபகப்படுத்திப் பாருங்கள். ‘சன்சூட்’ இற்காகத் துணியைத் தெரிவு செய்யும்போது அதிலிருக்க வேண்டிய பண்புகள் பற்றி இப்பொழுது உங்களுக்கு விளங்கியிருக்கும்.

- உறிஞ்சும் தன்மை
- சலவைக்கு ஈடுகொடுத்தல்
- அணிவதற்கு இலகுவான தன்மை
- கவர்ச்சியான நிறமுடையதாக இருத்தல்

போன்ற மேற்குறிப்பிட்ட காரணிகளை அவதானத்தில் கொள்ளவும்

## ‘சன்சூட்’ உடையைத் தைப்பதற்காக தெரிவுசெய்த துணியைச் செம்மையாக்கல்

‘சன்சூட்’ தைப்பதற்குமுன் சந்தையில் இருந்து விலை கொடுத்து வாங்கிய துணியைச் செம்மையாக்கல் வேண்டும்.



**செயற்பாடு 4**


10 ஆம் தரத்தில் குழந்தை உடையை நிர்மாணிக்கும்போது பெற்ற அனுபவத்தைக்கொண்டு, ‘சன்சூட்’ தைப்பதற்காக நீங்கள் தெரிவு செய்த துணியைச் செம்மையாக்கவும்.

## செம்மையாக்கப்பட்ட துணியின்மீது 'சன்சூட்' உடையின் மாதிரியுருவை வைத்து வெட்டிக்கொள்ளல்

### செயற்பாடு 5

தரப்பட்டுள்ள அறிவுரையைப் பின்பற்றி, 'சன்சூட்' உடையைத் தைப்பதற்காக மாதிரியுருவை வெட்டிக்கொள்ளவும். செம்மையாக்கப்பட்ட துணியின்மீது 'சன்சூட்' உடைக்கான மாதிரியுருவை விரித்து வைக்கும்போது,

1. துணியின் புறப்பக்கம் வெளியில் இருக்கக்கூடியதாக மடித்துக் கொள்ளவும்.
2. துணியின்மீது மாதிரியுருவின் பெரிய பகுதியை முதலில் வைத்து, பின் ஏனைய பகுதிகளை வைக்கவும்.
3. பாவுரேகையைக் கவனத்தில் கொண்டு, மாதிரியுருவின் நடுமடிப்பு, துணியின் நடுமடிப்பில் இருக்கக்கூடியதாக வைத்துக் குண்டூசியால் இணைக்கவும்.
4. அணையிட (Lining) வேண்டிய பகுதியையும் தோட்பட்டி மாதிரியுருவையும் துணியின்மீது வைத்து, குண்டூசியால் இணைக்கவும்.
5. தையல் விடுவெளியூடே வெட்டி வேறாக்கிக்கொள்ளவும்.
6. காபன் கடதாசியைத் துணியின் கீழ் வைத்து சுவடுவரை சில்லினால் தையல் விடுவெளியை அடையாளம் இடவும்.
7. துணியிலிருந்து குண்டூசியை அகற்றி, மாதிரியுருவை நீக்கி, இருபட்டுத் துணியையும் ஒன்றாக வைத்து குண்டூசியால் இணைக்கவும்.
8. துணியை மறுபக்கம் திருப்பி அப்பகுதியையும் முன்னர்போல் காபன் கடதாசியை வைத்து சுவடு வரை சில்லினால் தையல் விடுவெளியை அடையாளப்படுத்தவும்.




துணியின்மீது விரித்து வைக்கப்பட்ட மாதிரியுரு

உரு 10.4

# ‘சன்சூட்’உடையைத் தைத்துப் பூர்த்தியாக்கும் செயற்பாடுகள்



## செயற்பாடு 6

நீங்கள் 9 வது பாடத்தில் பெற்ற திறனை உபயோகித்து, ‘சன்சூட்’ உடையின் மேற்பகுதிக்கு அணையை இணைப்பதற்கு முன், பொருத்தமான அலங்காரத் தையல் முறைகளைப் பயன்படுத்தி அலங்கரித்துக் கொள்ளவும்.

- மேற்பகுதி அணையின் இடுப்பு விளிம்பின் உட்பக்கத்தில் சிறிய மடிப்பு ஒன்றைத் தைக்கவும்.
- அலங்கரிக்கப்பட்ட உடையின் உடற் பகுதியில் அணையின் சரியான பக்கத்தையும் ஒன்றாக வைத்துக் குண்டூசியால் பொருத்தவும்.
- அதன்பின் முறிவுக்கோட்டுக்கு அருகிலே பொய்நூல் ஓடிக் கொள்ளவும்.
- முறிவுக்கோட்டின்மீது பொறித் தையல் அல்லது விஸ்பத் தையல் இடவும்.
- மேலதிகமான தையல் விடுவெளிகளில் ‘பொலி’ வெட்டிக் கொள்ளவும்.
- பொய்நூலை நீக்கி, அணையிடப்பட்ட பகுதியை ‘சன்சூட்’ இன் புறப்பக்கத்திற்குத் திருப்பிக் கொள்ளவும்.
- பொருத்துகளின் ஓரங்களைக் கையினால் அமர்த்தி சூடான அழுத்தியினால் அழுத்திக் கொள்ளவும்.
- ‘சன்சூட்’ இன் தோட்பட்டியின் புறப்பக்கத்திற்குப் பொய் நூலோடி, பொறித் தையல் அல்லது விஸ்பத் தையல் தைத்துக் கொள்ளவும்.
- பொய்நூலை நீக்கிவிட்டு, மேலதிகமாக உள்ள பகுதிகளை வெட்டிக் கொள்ளவும்.
- இரண்டு தோட்பட்டிகளையும் நல்ல பக்கம் திருப்பி, விரல்களினால் நன்கு அமர்த்தி, அழுத்தியினால் அழுத்திக்கொள்ளவும்.
- பின்பக்க இடையை நேர்த்தியாக்குவதற்காக, தைத்து முடித்த தோட்பட்டியை உரிய முறையில் வைத்து, அதன் மேல் சரிவுக்கோட்டுத் துண்டை வைத்துப் பொய்நூலோடி, பின், நிரந்தரத் தையலைத் தைக்கவும்.
- இடைவிளிம்பிற்கு மீள்சக்தி நாடாவை (இலாஸ்ரிக்) உட்செலுத்தி, பொருத்தமான முறையில் தைத்து முடித்துக்கொள்ளவும்.


- பக்கப் பொருத்தைத் தைத்துக்கொள்ளவும். இதற்காக எளிய பொருத்தைப் பயன்படுத்தலாம் (தனிப் பொருத்து).
- ஒரு பக்கத்திற்கு பக்கத் திறப்பை அமைப்பதாயின் அப்பக்கத்தில் முறிவுக்கோட்டின்மீது சரிவுகோட்டுத்துண்டை வைத்துத் தைக்கவும்.
- சரிவுக்கோட்டுத் துண்டைத் தேவையான அகலத்திற்கு மடித்து, விளிம்பைத் தைக்கவும்.
- திறப்புக்காக 3 cm அகலமுள்ள சரிவுக்கோட்டுத் துண்டைப் பயன்படுத்தவும்.
- திறப்பின் கீழ்ப்பகுதிக்கு அந்த அகலத்தைவிடச் சிறிதளவுகூடிய அகலத்துடனான சரிவுக்கோட்டுத் துண்டை முறிவுக்கோட்டின்மீது வைத்து நிரந்தரத் தையலைத் தைத்து, அத்துண்டின் அகலத்தின் 1/2 பங்கு எஞ்சக்கூடியதாக பிற்பக்கம் திருப்பி, முதல் தையல் இரேகைமீது வைத்து புறப்பக்கமாகத் தைக்கவும்.
- தைத்து முடிந்தபின் திறப்பின் இருபக்க அகலமும் சமனாக இருத்தல் வேண்டும்.
- 'சன்சூட்' இன் கால்களுக்கு சரிவுக் கோட்டுத் துண்டு வைத்து அல்லது முகப்புத்துண்டு வைத்துத் தைத்துக்கொள்ளவும்.
- தோட்பட்டியின் அகலம் 3.5 cm ஆகும். பக்கப்பொருத்தில் ஒருபக்கத்துக்கு திறப்பு ஒன்றை அமைப்பதாயின் மாத்திரம், அந்தப் பக்கத்திலுள்ள காலைத் தைத்து முடித்த பின்பு, திறப்பினை அமைத்தல் வேண்டும்.
- பக்கத்திறப்பை மூடுவதற்காக பொத்தான் (தெறி) பிடித்துக் கொள்ளவும்.
- திறப்பில் மேல் பக்கத்திற்கு தெறியோட்டையையும் கீழ்பகுதிக்கு தெறியையும் பிடிக்கவும்.
- 'சன்சூட்' இன் தோட்பட்டியின் ஓரத்திற்கு இரண்டு தெறிகள் பிடித்துக் கொள்ளவும்.
- 'சன்சூட்' இற்கு பிடிக்கும் அனைத்துத் தெறிகளும் ஒரே வகையானதாக இருத்தல் வேண்டும்.
- 'சன்சூட்' இன் மேற்பகுதிக்கு தெறியோட்டை 2 தைத்துக் கொள்ள வேண்டும்.
- திறப்புக்காக குறுக்காக தெறியோட்டையை அமைத்துக்கொள்ளவும்.
- தெறியோட்டையைத் தைப்பதற்கு தெறியோட்டைத் தையலையே பயன்படுத்த வேண்டும்.

## செயற்பாடு 7


முதலில் திறப்பை அல்லது தோட்பட்டியை குறிப்பிட்ட இடத்தில் வைத்து தெறியோட்டையின் அளவை அடையாளப்படுத்தவும்.

பின்பு, திறப்பிலே துணியின் இரு பட்டுகளையும் இரண்டையும் பிடித்து, வளைவுகள் இல்லாதவாறு அடையாளப்படுத்தி அளவாக வெட்டவும்.

9 வது பாடத்தில் பெற்ற அனுபவத்திற்கேற்ப கீழே காணப்படும் உரு 10.5, 10.6 என்பவற்றை நன்கு அவதானித்து, குறுக்கான தெறியோட்டையைத் தைத்து முடித்துக்கொள்ளவும்.



உரு 10.5 குறுக்கான (கிடையான) தெறியோட்டை




உரு 10.6 நிலைக்குத்தான தெறியோட்டை

## செயற்பாடு 8

**'சன்சூட்' இன் திறப்பிற்கும் தோட்பட்டிக்கும் தெறி (பொத்தான்) பிடித்துக் கொள்ளல்.**

- தெறிபிடிப்பதற்கு முன் திறப்புகளை ஒன்றன்மீது ஒன்றை வைத்து, தெறி இணைவதற்குரிய இடத்தை அடையாளப்படுத்திக்கொள்ளவும்.
- தெறிபிடிக்கும் இடத்தில் புறப்பக்கத்திலே இரண்டு அல்லது 3 தையல்கள் தைத்து, ஊசியையும் நூலையும் சரியான பக்கத்திற்கு எடுக்கவும்.



- தெறியின் கீழ்த் துவாரம் ஊடாக நூலைச் செலுத்தித் திரும்பவும். துணியைத் திருப்பி, நூலையும் ஊசியையும் வெளியே இழுத்துக்கொள்ளவும்.
- இவ்வாறு பல முறைகள் செய்த பின்பு புறப்பக்கத்திற்கு ஊசியைக் குற்றி, தையலைத் தைத்து, நூலை வெட்டி நீக்கிக்கொள்ளவும்.

- பொத்தானைப் (தெறி) பிடிக்க முன் முதலில் திறப்பை நன்கு தைத்து முடித்துக்கொள்ளல் வேண்டும்.
- திறப்புக்களை மூடும்போது ஆண் உடைகளின் இடப்பக்கம் மேலும் வலப்பக்கம் கீழும் இருக்கக் கூடியதாகவும், பெண்பிள்ளைகளின் உடைகளில் வலப்பக்கம் மேலும் இடப்பக்கம் கீழும் இருக்கக் கூடியதாகவும் வைத்தல் முக்கியமாகும்.
- பொத்தான் தெறி பிடிக்கும் வரிசை நேராக இருப்பதுடன் பொத்தான்களுக்கு இடையில் இடைவெளியும் சமமாக இருத்தல் வேண்டும்.
- அலங்காரத்திற்காகப் பொத்தானை தெறி பிடிக்கும்போது, பல்வேறு அமைப்புகளில், நிறங்களில், பொருள்களில் தயாரிக்கப்பட்ட பல்வேறு அளவுகளில் உள்ளவற்றைத் தெரிவுசெய்ய முடியும்.
- ஒரே இன, நிறப் பொத்தானையே தெறி பிடித்தல் வெண்டும்.
- திறப்பினால் உடையின் அலங்காரத்திற்கு தடைகள் ஏற்படக் கூடாது.

## பொதி செய்தல்

தைத்து முடித்த 'சன்சூட்' ஐ சூடான அழுத்தியினால் நன்கு அழுத்தவும். பொதி செய்யும் முறைகள் பல கீழே தரப்பட்டுள்ளன. நீங்கள் விரும்பிய முறையில் அதனைப் பொதிசெய்ய முடியும்.

- செலோபேன் அல்லது பொலித்தீன் உறையில் பொதி செய்தல்.
- பொதி செய்யும் பெட்டியில் அடைத்தல்.
- பல்வேறு தாங்கிகளில் போட்டுத் தொங்கவிடல்.



உரு 10.8
'சன்சூட்' அணிந்துள்ள பிள்ளைகள்

## பொழிப்பு

- குழந்தையின் உடை பல்வேறு பாங்குகளில் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
- பிள்ளையின் உடைக்குப் பயன்படுத்தும் துணி, சலவைக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகவும் நீரை உறிஞ்சக்கூடியதாயும் இருக்க வேண்டும்.
- பிள்ளையின் உடைக்கு சிறிய அலங்காரங்களை உடைய துணியைத் தெரிதல் மிகப் பொருத்தமானது.
- கடும் வர்ணங்களை எப்பிள்ளையும் விரும்பும்.
- பிள்ளை உடை அணியவும் கழற்றவும் இலகுவானதாய் இருத்தல் வேண்டும்.
- பிள்ளையின் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் உடைகள் தயாரிப்பது முக்கியம்.
- பொருத்தமான நிறநூல்களைக் கொண்டு அலங்காரத் தையல் முறைகளைப் பயன்படுத்தி 'சன்சூட்' ஐ அலங்கரிக்கலாம்.
- பிள்ளைகளுக்கான உடையைத் தைக்கும்முன், துணியைக் கழுவி முன் ஆயத்தம் (செம்மை) செய்தல் வேண்டும்.
- 'சன்சூட்' ஐத் தைக்கும்போது சரியான தையல் முறைகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

**இப்பொழுது உங்களுக்கு,**

- பிள்ளை உடையின் பாங்குகளில் இருக்கும் பண்புகளைத் தெளிவாக்குவதற்கும்
- பிள்ளையின் உடைக்குப் பொருத்தமான துணிவகையைத் தெரிவு செய்வதற்கும்
- பிள்ளை உடைக்கான பாங்கைத் தெரிவு செய்வதற்கும் பொருத்தமான மாதிரியுருவை உருவாக்குவதற்கும்
- மாதிரியுருவைப் பயன்படுத்தி 'சன்சூட்' ஐத் தைப்பதற்கும்
- 'சன்சூட்' ஐக் சரியாக வெட்டிக்கொள்வதற்கும்
- சரியான தையல் முறையைப் பாவித்து 'சன்சூட்' ஐத் தைத்துக்கொள்ளவும்
- அலங்காரத் தையல் முறைகளால் 'சன்சூட்'ஐ அலங்கரிக்கவும்

**முடியுமாயிருக்கும்.**